சேர்ந்த என்ஜினியர்கள் போய் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தோம். அவர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. மறுபடியும் பிளானிங் கமிஷனுக்கு எழுதி, செண்டிரல் வாடர் பவர் கமிஷன் மதராஸ், திருவாங்கூர் சர்க்கார்களின் ஒத்துழைப்பின் பேரில் பரிசீலனை செய்வதாக சொல்லியிருக்கிறார்கள்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : மேற்கு பெரியாறு என்ற இடத்தில் இன்னும் அதிகமாக தண்ணீர் தேக்கிக்கொண்டு வர முடியும் என்று சொல்லப்படுகிறது. கல்லார் ஒரு தனித் திட்டம். இனி மேல் அது பரிசீலிக்கப்படும் என்றால், மேல் பெரியாறு என்ற இடத்தில் அதிக தண்ணீர் தேக்கலாம். அதை திருப்பிக்கொடுக்க கேரள சர்க்கார் முன்வந்திருக்கிறார்களா ? அதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடக்கின்றனவா ?

MR. SPEAKER : This supplementary does not arise out of the main question. The hon. Member may put a separate question.

SRI K. RAMACHANDRAN : இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையக் கூடிய பகுதிகள் யாவை என்பதைச் சொல்லமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : எந்தப் பகுதி என்று சொல்ல முடியாது. இருந்தாலும், மதுரை ஜில்லா மேற்குப் பகுதியாக இருக்கலாம்.

MR. SPEAKER : ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன் கேட்ட கேள்விக்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவதாயிருந்தால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

New bus routes in North Arcot district

* 484 *Q.*—SRI P. S. SANTHANAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of applications received for the opening of new bus routes in the North Arcot district in 1957–58;

(*b*) of these, how many are new applicants and how many are bus operators with the existing bus permits; and

(*c*) of these how many are Harijans?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 229.

(*b*) (i) 115 and (ii) 114.

(*c*) 1 (new entrant).

SRI P. S. SANTHANAM : " மார்க் லிஸ்டத்தை " நீக்கிவிட்டு, ஏழை ஹரிஜனங்களுக்கு பஸ் ரூட்கள் வழங்குவதற்கு சர்க்கார் முன்வருமா ?

SRI P. U. SHANMUGAM : புதிய பஸ் பர்மிட் கேட்கக்கூடியவர்களுக்கு 15 மைல்களுக்கு உள்பட்ட ரூட்கள்தான் கொடுக்கப்படும் என்று சர்க்கார் உத்தரவு இருக்கிறது. அதை 25 மைல் என்று திருத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

MR. SPEAKER : How does this supplementary arise out of the main question? The main question is 'How many are new applicants, and of these how many are Harijans?' The supplementary question is out of order.

24th September 1958]

SRI T. SAMPATH : Sir, will the Government consider the feasibility of the system of auctioning routes, just as we were doing in the case of tolls in former days, so that the Government may get more revenue and at the same time avoid unhealthy litigation?

THE HON. SRI V. RAMAIAH : The suggestion is welcome. But it does not arise out of this question.

Village roads in Lalgudi taluk

* 485 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the length of new village roads formed in Peruvalappur and Kariamanickam firkas in the Lalgudi taluk, Tiruchirappalli district, in 1957–58; and

(*b*) the length of these roads actually metalled so far?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Three miles.

(*b*) One mile and four furlongs.

SRI S. LAZAR : எத்தனை மைல் நீளத்திற்குப் போடுவதாக இருந்தது ? என் மீதி இடங்களுக்கும் போடப்படவில்லை.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : மூன்று மைல், இப்பொழுது ஒரு மைல் 4 பர்லாங் அளவிற்கு வேலை முடிந்திருக்கிறது. மற்ற பகுதிகளில் வேலை நடக்கிறது.

SRI S. LAZAR : நான் கேட்டிருக்கக்கூடிய கேள்வியிலே இரண்டு பிர்க்காக்களைப் பொறுத்துக் கேட்டிருக்கிறேன். இரண்டு பிர்க்காக்களிலும் 3 மைல்தான் போடுவதாக இருந்ததா ? அல்லது வேறு காரணங்களுக்காக அது விடப்பட்டதா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : வேறு காரணங்களுக்காக விடப்பட்டதாகத் தெரியவில்லை. 3 மைல்தான் இங்கு குறிப்பிட்டிருக்கிறது.

Use of Tamil in Legislature

* 486 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சட்ட சபைகளின் நிகழ்ச்சிகளிலே என்னென்ன நடவடிக்கைகள் தமிழில் நடைபெறுவதற்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Agenda, Questions List, etc., of the Assembly are issued in both English and Tamil. The Members now usually speak in Tamil and their speeches are reported and published verbatim in the Official Debates. Thus so far as this House is concerned; the business is in practice, being transacted in Tamil.

SRI P. G. MANICKAM : ஸார், உப கேள்விகளுக்குத் தமிழில் பதில் அளிக்கப்படுவது போல, மூல கேள்விகளுக்கும் பதில் தமிழில் கொடுக்க சர்க்கார் கவனம் செலுத்துமா ? 9-40 a.m.